19 ஆகஸ்ட்டு 2018

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொது காலம் 20ம் ஞாயிறு

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

மாதாந்திர கருப்பொருள்:

## அஞ்சாதீர், நாம் மரியாளோடு கிறிஸ்துவிற்குச் சொந்தமானவர்கள்.




வி விருந்துக்கான அழைப்பு வருவது நம்மவர்களுக்கு ஒரு வழக்கமான ஒன்று. அதுவும் இன்னொருவர் செலவில் நடத்தப்படும் விருந்து நிகழ்ச்சிக்குச் சென்று வரும் அனுபவம், தனி அனுபவம் அல்லவா?

**அஞ்சாதீர், கிறிஸ்துவிற்கு கதவை அகலத் திறந்து விடுங்கள்.**

- புனித 2ம் ஜோன் பவுல்

இன்றைய முதல் வாசகத்தில், ஞானப் பெண்மணி விருந்துக்கு அழைக்கிறாள். நீதிமொழி(பழமொழி) புத்தகத்தின் 2 முதல் 7 பிரிவுகளில் காணப்படும் அவளது போதனைகள் அடங்கிய ஏழு தூண் வீட்டிற்கு, சாலையோரத்தில் உட்கார்ந்து கொண்டு அனைவரையும் அவள் அழைக்கிறாள். வாழ்விற்குத் தேவையான செல்வங்களை அவள் வாரி வழங்குகிறாள். ஆயினும் அனைவரும் அதனை ஏற்றுக் கொள்வதில்லை. திடீர் இன்பத்தை வழங்கும் பொய்யான அழைப்பையே பெரும்பாலோர் விரும்புவர். இறுதியில் அதன் விஷமத்தனம், அழிவைக் கொண்டு வரும்.

தாம் எழுதிய கடிதத்தில், கிறிஸ்து இல்லாத போது, இருளில் வாழ்ந்ததை எபேசிய மக்களுக்கு புனித பவுல் சுட்டிக்ககாட்டுகிறார். இப்போது ஆண்டவரில் இருக்கும் மக்கள், ஒளியாக விளங்குகின்றனர். ஒளியின் மக்கள் என்ற அடையாளத்தைப் பெற்றிருக்கும் அவர்கள், மற்றவர்களைப் போல் அல்லாமல் வித்தியாசமாக வாழ அழைக்கப்படுகின்றனர். பகுத்தறிவை இழக்கச் செய்யும் குடிப்போதையைத் தவிர்க்க வேண்டும். தூய ஆவியால் நிரப்பப் பெற்று, இயேசு கிறிஸ்துவின் பெயரில் கடவுளுக்கு எப்போதும் நன்றி கூறவேண்டும் என பவுல் அழைக்கிறார். ஆயினும் எபேசு நகரிலுள்ள எல்லாக் கிறிஸ்துவர்களும் பவுலின் அழைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை.

நற்செய்தியில், இயேசுவும் விருந்துக்கு வரும்படி யூதர்களுக்கு அழைப்பு விடுக்கிறார். ஆனால் இங்கு, இயேசுவே விருந்தின் உணவாக இருக்கிறார். முதலில் அப்பத்தை அளிக்கிறார். அனைவரையும் ஊட்டம் பெறச் செய்யும் ஞான மற்றும் வெளிப்பாட்டின் அப்பமாக அவரே இருக்கிறார். மகிமைமிக்க கடவுளின் மகனின் உடலையும் இரத்தத்தையும் உண்ணும் அனைவருக்கும் நிலைவாழ்வின் ஊற்றான 'நற்கருணையாக' அவர் திகழ்கிறார். ஆயினும் அனைவரும் இந்த அழைப்பை ஏற்றுக் கொள்வதில்லை. பலர் அவரிடமிருந்து விலகிச் செல்கின்றனர்.

**“ஆண்டவர் நல்லவர் என்பதை சுவைத்துப் பாருங்கள்”**, கடவுள் நம்மை எப்போதும் அழைக்கிறார். அவரது அழைப்பை ஏற்றுக் கொள்வது நம்மை பொறுத்தது. இன்னல், இடையூறுகள், சவால்களுக்கு இடையில் இயேசுவின் தாயாகும் இறை அழைப்பை ஏற்றுக் கொண்ட மரியாளைப் போல், நமது வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் விடுக்கப்படும் இறை அழைப்புக்கு நாமும் “ஆம்” என்று சொல்வோமாக! ✝

**வாரம் ஒரு வசனம்**

“ஆண்டவர் நல்லவர் என்பதை சுவைத்துப் பாருங்கள்”

INTERNAL CIRCULATION ONLY
BUL 33/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Stenoprint Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ

*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
*எதிர் நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்.*
*2018 ஆகஸ்ட்டு (ஆவணி) மாதத்தின் கருப்பொருள்:*
***மரியாவுடன் நாம் கிறிஸ்துவுக்கு உரியவராவோம், அஞ்சாதீர்***
**மினவுதல் தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டை நோக்கிய பயணம்**
**(1848 - 2018)**

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: பொதுக்காலம் 20ஆம் ஞயிறு** **சனி 18-08-2018 - ஞாயிறு 26-08-2018**

நீ.மொ: 9: 1-6 தி.பா: 33: 2-3, 10-11, 12-13, 14-15 எபே: 5: 15 - 20 யோவான்: 6: 51 - 58

**"ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள்" - திபா 33**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 18 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/ நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி (புனித சிசிலியா) | **விவிலியக் கல்வி (Bible Knowledge) :** மதியம் 2.30 மணி ஆலய மண்டபம் மேல் அறை<br>**மாலை 7.00 மணிக்கு குழந்தைகளுக்கான திருமுழுக்கு** |
| ஞாயிறு | 19 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (புனித லூர்து அன்னை சாகா<br>திருப்பலி (ஆ) (புனித டானியேல்)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30 (ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |
| **உலக பூர்வீக குடிமக்களின் தினம் 2018 :** காலை 10.00 -4.00 வரை - கம்போங் செபீர் கிறிஸ்து ஒளி சிற்றாலயம். திருப்பலி பகல் 1.00 மணி தே. மொ | | | | |
| திங்கள் | 20 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 21 | 6.45 கா | திருப்பலி | ***மாலை 7.30 மணி திருமணி ஆராதனையும் திருப்பலியும் (த) அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம் - காடோங்*** |
| புதன் | 22 | 6.45 கா | திருப்பலி | |
| வியா | 23 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 24 | 6.45 கா | திருப்பலி | ***மாலை 7.30 மணி திருமணி ஆராதனையும் திருப்பலியும் (த) திரு இருதய ஆண்டவர் சிற்றாலயம் - மார்ஜெரி*** |

**பொதுக்காலம் 21ஆம் ஞயிறு**

யோசுவா: 24: 1-2a, 15-17, 18b தி.பா: 33: 2-3, 16-17, 18-19, 20-21, 22-23 எபே: 5: 21 - 32 யோவான்: 6: 60 - 69

**"ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள்" - திபா 33**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 25 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/ நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி (புனித சிசிலியா) | **விவிலியக் கல்வி (Bible Knowledge) :** மதியம் 2.30 மணி ஆலய மண்டபம் மேல் அறை<br>**காலை 10.00 மணிக்கு விஷேட திருமுழுக்கு** |
| ஞாயிறு | 26 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (திருவழிபாட்டுக் குழு<br>திருப்பலி (ஆ) (புனித கிறிஸ்தோபர்)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தேமொழி)<br>மாலை 4.30 தித்தி (சீ) திருவிழா | **மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறாது**<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம் )<br>**திருவிழா திருப்பலி மாலை 4.30 மணி புனித அகுஸ்தீனார் சிற்றாலயம் தித்தி (சீ)** |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

**2018 ஆகஸ்ட் (ஆவணி) மாத செய்திகள் / நிகழ்வுகள்**

i) பங்கு ஆலய காணிக்கை
11/12 ஆகஸ்ட் ரிம:10,097.40
*இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!*

**ii) மினவுதல் தேவாலய ஆங்கிலப் பாடல் குழுவினர்** பாடுவதற்கு ஆர்வமுள்ளவர்களை அழைக்கின்றார்கள். தொடர்புக்கு: சூசன் 017-884 6604

**2) இரத்த தான முகாம்:**
இடம்: காடோங் அன்னை வேளாங்கன்னி சிற்றாலயம்
நாள்: 02-09-2018 நேரம்: காலை 10.00 - பகல் 2.00 வரை
தொடர்புக்கு: கிறிஸ்டோபர் 010- 231 2582

**மரித்த ஆன்மாக்களுக்காக செபிப்போம்**
அண்டோ ஃபிடலிஸ் (இறப்பு: 14-08-2018)
**முடிவில்லாத ஒளி இவர் மேல் ஒளிர்வதாக!**

**மரித்தோர் மற்றும் அடக்கம் - சிகாமட் கல்லறை**

- **மினவுதல் தேவாலய** பங்கின் கீழ் இருக்கும் கத்தோலிக்க குடும்பத்தில் இறப்பு ஏற்பட்டால், அதற்கான இறப்பு திருப்பலி இறந்தோரின் குடும்பத்தினரால் மட்டுமே வந்து பதிவு செய்ய முடியும். இறப்பு ஏற்பாட்டு குழுவினர் இதை செய்ய அனுமதியில்லை.
- **சிக்காமட் கல்லறையில்** இடம் பதிவு செய்ய குடும்பத்தினர் சிரம்பான் நகராண்மைக் கழகத்தில் பதிவு செய்ய வேண்டும் ((MPS) இடங்கள் வெகு குறைவாக இருப்பதால், அதற்குத் தேவையான பரிந்துரைக் கடிதம் பங்கு அலுவலகத்தில் (பங்கு குருவானவர்) இருந்து பெற்றுக்கொண்டு செல்லவும்
- **பொது விடுமுறை நாட்களில்** பங்கு அலுவலகம், மற்றும் நகராண்மைக் கழகம் (MPS) மூடப்பட்டிருக்கும் வேளையில் திரு. T.சேவியர் அவர்களை தொடர்பு கொள்ளவும். (012-680 0016)
- **இந்திய உணவு மற்றும் கேளிக்கைப் பெருவிழா:** - மலேசிய இந்து சங்கத்தின் உறுப்பினர்கள் தங்களுடைய நிதிக்காக உணவு விற்பனை செய்கிறார்கள். நாள்:26-08-2018 நேரம் காலை 10.00 - பகல் 3.00 வரை. இடம்: NSK Trade City Seremban 2,

இன்று திருப்பலியை வழிநடத்திய சாகா லூர்து அன்னை சிற்றாலய அதிச வினருக்கு நம்முடைய மனமார்ந்த நன்றிகள்:

- **170 ஆம் ஆண்டின் நிறைவு - காஃபி டேபிள்- கார்னர் ஸ்டோன் புத்தகம்** பங்கு மக்கள் 5 புத்தகம் அடங்கிய பொட்டலத்தை எடுத்து சென்று வெளியில் விற்பனை செய்யலாம். பணத்தை பிறகும் செலுத்தலாம். இதற்காக அமைக்கப்பட்டிருக்கும் மையத்தை நாடுங்கள்.
- **ஏழைகளுக்கான பணிக்குழு: (ஏழைகளின் ஆலயம், ஏழைகளுக்கானது - திருத்தந்தை பிரான்சிஸ்)** ஏழைகள் மற்றும் உதவி தேவைப்படுவோருக்கான இந்தப் பணிக்குழு அண்மையில் நம்முடைய பங்கில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கூடுதல் விவரங்கள் விரைவில் அறிமுகப்படுத்தப்படும். நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன. இதற்காக காலியான வீடு யாராவது கொடுத்து உதவ முன்வந்தால் பெரிதும் வரவேற்கிறோம்.தொடர்புக்கு பங்கு அலுவலகம்.மற்றும் ஸ்டீபன் டெனிசாப்பு (016-6110681)
- **புனித மேரி கிண்டர்கார்டன் பாலர் பள்ளிக்கான சின்னம் வரையும் போட்டி.** ஜலான் லீ சாம். அனைத்து மறைக்கல்வி மாணவர்களையும் இதில் கலந்து கொள்ள அழைக்கின்றோM. கல்வி, அன்பு, அமைதி ஆகியவற்றின் அடிப்படையில் சின்னம் அமைய வேண்டும். வெற்றியாளர்களுக்கு பரிசுகள் உண்டு. இதற்கான விண்ணப்ப படிவங்களை பங்கு அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். போட்டிக்கு இறுதி நாள்: 16-09-2018
- **உலக பூர்வீக குடிமக்களின் தினம் 2018 (சபா & சரவாக்/பூர்வீக குடிமகக்ள்)** 19-08-2018(ஞாயிறு) காலை 10.00 -4.00 வரை - கம்போங் செபீர் கிறிஸ்து ஒளி சிற்றாலயம். திருப்பலி பகல் 1.00 மணி தேசிய மொழியில். விளையாட்டுப் போட்டிகள், கண்காட்சிகள், படைப்புகள் மற்றும் சுவை யான உணவுவகைகள்:
- **சமயங்களுக்கிடையிலான உரையாடல் பணிக்குழு (** PMEIA) இவற்றைப் பற்றி மேலும் அறிந்துகொள்ள ஒரு நாள் நிகழ்ச்சி நெகிரி மாநில அளவில் நடைபெறுகிறது 22-08-2018(பொதுவிடுமுறை) நேரம் காலை 9.00 - 2.00 வரை தொடர்புக்கு: கிறிஸ்டோபர் ( 019-6216 194) கட்டணம் ரிம:10.00 நபருக்கு அனைத்து பணிக்குழு பொறுப்பாளர்களையும், இளைஞர்கள், பங்கு மக்களையும் வரவேற்கிறோம்.
- **கணினி அனுபவமுள்ளவர்கள் தேவை :** தமிழ் திருப்பலி நேரத்தில் LCD இயக்க கணினி அனுபவமுள்ளவர்கள் தேவைப்படுகிறார்கள். தொடர்புக்கு : பங்கு அலுவலகம் அல்லது கப்ரியேல் : 010 367 6954 / டேவிட் அலிமுத்து 0139326747

- **தித்தி புனித அகுஸ்தினார் திருவிழா** - 26-08-2018 (ஞாயிறு) மாலை 4.30
- **மறைக்கல்வி மாணவர்களுக்கு( குழந்தையில் திருமுழுக்குப் பெற தவறியவர்களுக்கு)** விசேச திருமுழுக்கு 25-08-2018 காலை 10.00 மணி
- **குருவானவர்கள் இல்லச் சந்திப்பு நடத்துகிறார்கள்.** ஆகஸ்ட் மாதத்தில் சோன் 13(செனவாங்) சோன் 14 (தாமான் துங்கு ஜாபார்) பொறுப்பாளர்களுக்கு முன்னரே அறிவிக்கப்படும்.
- **காடோங் - அன்னை வேளாங்கன்னி சிற்றாலயத் திருவிழா** - செப்டம்பர் 7-9, 2018
  07-09-2018(வெள்ளி) மாலை 7.00 மணி செபமாலை/திருமணி ஆராதனை/கொடியேற்றம்
  08-09-2018(சனி) மாலை 6.00 மணி செபமாலை/திருப்பலி/பவனி/நற்கருணை ஆசீர்
  09-09-20189(ஞாயிறு) காலை 10.30 திருவிழா திருப்பலி
- **F.I.R.E Conference 2018** புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயம். நாள்: 31-08-2018 - 2-09-2018 வரை (வெள்ளி- ஞாயிறு) தொடர்புக்கு போல் 018-210 3908 /ஆட் ரி 016- 337 6120
- **"சோய்ஸ்" வார இறுதி நிகழ்ச்சி:**
  ஆங்கிலம் (APC) அக்டோபர் 5-7(வெள்ளி -ஞாயிறு) 2018 தொடர்பு:
  choiceklrecruitment@gmail.com
- **தேசிய தினக் கொண்டாட்டம். மெர்டேக்கா திருப்பலி** 31-08-2018 காலை 8.30 செபமாலை & நவநாள் தொடர்ந்து திருப்பலி காலை 9.00